**ஹல்தும்முல்ல பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹல்தும்முல்ல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று, உரிமை மூலதனததில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஹல்தும்முல்ல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமா்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது சபைக்குரிய காணிகளை அளவிடல் மற்றும் நிலவரைபடம் தயாரிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 540,000 மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது ஹல்துமுல்ல ஒரு நூலகத்திற்கு நன்கொடையாக கிடைத்த ரூபா 93,730 பெறுமதியான 110 நூலக புத்தகங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | முன்னைய ஆண்டுகளின் போது மதிப்பீடு செய்யப்பட்டு நிறைவேற்றப்படாதிருந்த 48 செயற்திட்டங்களுக்காக ரூபா 9,753,707 கடன் கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 09 வேலைகள் தற்போது அமுல்படுத்தப்படுகின்றது. 03 வேலைகளின் கடன்கொடுத்தோர் மீதி 2023 ஆம் ஆண்டின் கணக்குகளில் இருந்து அகற்றப்படும். | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| (ஈ) கெப் வண்டி ஒன்று விபத்துக்கு ஏற்பட்டமைக்காக முன்னைய ஆண்டிற்கு காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் இருந்து பிரதேச சபைக்கு மேலும் கிடைக்க வேண்டிய ரூபா 102,849 கிடைக்க வேண்டிய காப்புறுதி இழப்பீடாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளில் நீக்கப்படும். | - மேற்படி - |
| (உ) மீளாய்பவாண்டின் போது வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த கழிவுப் பொருள் தளத்தில் கழிவுகளை சேகரிக்கும் களஞ்சிய அறையின் பூர்த்தி வேலை பெறுமதி ரூபா 1,892,539 ஆக இருந்த போதிலும், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணத்தின் கீழ் ரூபா 1,564,439 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) மீளாய்வாண்டின் போது பிரதேச அபிவிருத்தி உதவி (LDSP) செயற்திட்டத்தின் மூலம் உதவியாக கிடைத்து செலவிடப்பட்ட ரூபா 11,985,044 தொகை மூலதன வருமானம் மற்றும் மூலதன செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) கடந்த ஆண்டுகளின் போது பிரதேச சபையினால் ரூபா 728,165 நிலுவை கடை வாடகைக்காக தொடரப்பட்ட 04 வழக்குகள் தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | எதிர்காலத்தில் வழக்கு நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் கணக்குகளில் உள்ளடக்கப்படும். | நிகழ்த்தக்க பொறுப்புக்கள் தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் நிலுவையான முத்திரைக் கட்டண மீதி மற்றும் பட்டோலையின் நிலுவை மீதி முத்திரைக் கட்டண மீதிகளுக்கு இடையே ரூபா 2,388,963 வேறுபாடு காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டின் கணக்குகள் சமர்ப்பிக்கும் போது சரிசெய்யப்படும். | பட்டோலைகள் மற்றும் கணக்குகளின் மீதிகளை ஒப்பீடு செய்து சரிசெய்யப்படல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுப்பெறுமதி ரூபா 23,855,567 ஆன சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் 05 விடயங்களுக்குரிய நிலையான சொத்து பதிவேடு, பட்டோலைகள், வைப்புச் சான்றிதழ் மற்றும் இருப்பு மெய்மெய்யாய்வு அறிக்கை சமர்ப்பிக்காமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் பதிவேடுகள் மற்றும் பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371 | முன்னைய ஆண்டுகளின் 04 சந்தர்ப்பங்களின் போது கிடைக்கப் பெற்ற ரூபா 628,788 தொகை மற்றும் மீளாய்வாண்டின் போது 10 சந்தர்ப்பங்களுக்கு உரியதாக வழங்கப்பட்ட முற்பணம் ரூபா 194,300 என்பன தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | முற்பணங்களின் போது மீதி தீர்க்கப்பட்டுள்ளது. ஏனைய முற்பணம் தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பெறப்பட்ட முற்பணம் உரிய பணிகள் நிறைவு பெற்றவுடன் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,196,570 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,771,925 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மான மூலம் | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிட ப்பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2021 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிட ப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரி | 2,759,810 | 3,238,446 | 2,009,918 | 1,228,528 | 2,842,689 | 2,674,657 | 1,906,778 | 767,879 |
| (ii) | வாடகை | 2,619,900 | 2,691,367 | 2,254,307 | 437,060 | 2,346,400 | 2,630,867 | 2,243,713 | 387,154 |
| (iii) | அனுமதி ப்பத்திரக் கட்டணம் | 781,350 | 1,215,506 | 1,215,506 | 0 | 662,400 | 674,501 | 674,501 | - |
| | மொத்தம் | 6,161,060 | 7,145,319 | 5,479,731 | 1,665,588 | 5,851,489 | 5,980,025 | 4,824,992 | 1,155,033 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ரூபா 7,145,319 ஆன மொத்த வருமானத்தில் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 1,665,588 அறவிடப்படாதிருந்ததுடன், அது மொத்த சிட்டையிடப்பட்ட வருமானத்தில் 23 சதவீதம் ஆகும். | நாட்டில் காணப்பட்ட நெருக்கடியான நிலைமையின் காரணமாக இருந்ததுடன், எதிரகாலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை ஆதன வரி விரைவாக அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) ஹல்தும்முல்ல பிரதேச சபைக்குரிய உட விகாரகல பார்வையாளர் மேடை மற்றும் அதன் மலசல கூடம் தொடர்பாக 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக 2019 பெப்ரவரி 06 ஆம் திகதி வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு வெளித்தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவை வாடகையான ரூபா 309,276 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக வழக்கு தொடரப்பட்டுள்ளது. | நிலுவை வாடகை பணம் அறவிடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபைக்குரிய சுடலைக்கூடத்தின் செயற்பாடுகள் 2021 மார்ச் 06 ஆம் ஆரம்பிக்கப்பட்ட போதும் கணக்காய்வு திகதியான 2023 மார்ச் 29 ஆம் திகதி வரையில் அதற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுடலைக் கூடத்திற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறப்படல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2015 மார்ச் 31 ஆம் திகதி சபை நிதியத்தின் கீழ் கிதுலகஹஅராவ கிராமிய அமைப்பிற்கு மதகு ஒன்றை நிர்மாணிப்பதற்கும், குடிநீர் வழங்கும் செயற்திட்டத்திற்கும் முறையே ரூபா 10,000 மற்றும் ரூபா 100,000 முற்பணம் வழங்கப்பட்டிருந்த போதிலும், நிர்மாண வேலைகள் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் முற்பணமும் தீர்த்து வைக்கப்படவில்லை. | இந்த பணத்தை தீர்த்து வைக்குமாறு உரிய சங்கத்திற்கு அறிவிக்கப்பட்ட போதும், இது வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை. | முற்பணம் பெற்ற பணிகளை நிறைவேற்றுவதற்கோ அல்லது முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 மே மாதம் 28 ஆம் திகதி விபத்திற்கு உட்பட்டிருந்த பிரதேச சபைக்குரிய கெப் வண்டி தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இறுதி அறிக்கையின் பிரகாரம் அதன் நட்டமான ரூபா 488,000 மற்றும் அதில் 25 சதவீதமான அரசாங்க கட்டணம் தலைவரிடம் இருந்து அறவிடும் பரிந்துரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பரிசோதனை சபையின் பரிந்துரை அமுல்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | 1982 நவம்பர் 08 ஆம் திகதி பிரதேச சபையின் கொஸ்லந்த உப அலுவலகத்திற்குரிய வீடொன்று வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு பிரதேச சபையின் ஊழியருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 1984 சனவரி 01 ஆம் திகதி அந்த உத்தியோகத்தர் ஓய்வுபெற்றுச் சென்றிருந்தார். எனினும், கணக்காய்வு திகதியான 2023 | அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இல்லத்தின் உரித்தை மீண்டும் பெற்றுக் கொள்ளும் சட்டத்தின் கீழ் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். | சபையின் ஆதனங்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல் வேண்டும். |

மார்ச் 29 ஆம் திகதி வரையிலும் உரிய வீடு பிரதேச சபைக்கு மீண்டும் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2012 ஆகஸ்ட் 24 ஆம் திகதிய 1773 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விஷேட வர்த்தமானி 4(ஆ) பகுதியின் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள பிரகாரம் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாதாரர்களின் கவர்ச்சிக்கு உட்பட்ட பெரகல நாற்சந்தி முதல் உட விகாரகல வரையான காட்சி பரப்புக்கு இடையூறாக நிர்மாணிக்கப்பட்ட அனுமதியற்ற நடமாடும் விற்பனை கொட்டகைகள் 2023 மார்ச் 29 ஆம் திகதி வரையும் அகற்றப்பட்டிருக்கவில்லை. | அனுமதியற்ற நடமாடும் வியாபார கொட்டகைகள் எதிர்காலத்தின் போது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொது மக்களுக்கு இடையூறான நிர்மாணிப்புக்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹல்தும்முல்ல பிரதேச சபைக்குரிய கழிவுப் பொருள் தளத்தில் கழிவுப் பொருள் களஞ்சியப்படுத்தும் அறையின் நிர்மாண வேலையின் இறுதி கொடுப்பனவுகளுக்குரிய அளவிடைப் பத்திரத்தில் விடய இலக்கம் 08 இன் பிரகாரம் யன்னல் மற்றும் கதவுகளுக்காக பித்தளை பிணைப்புக்கள் மற்றும் துணைப்பாகங்கள் பொருத்தப்பட வேண்டிய போதிலும், அதற்காக இரும்பு பிணைப்புக்கள் மற்றும் துணைப்பாகங்கள் பொருத்தப்பட்டிருந்தமை அதில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட மாதிரிகளுக்கு இணங்காத விடயங்களுக்காக ரூபா 149,627 சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. | கழிவுப் பொருள் களஞ்சியப்படுத்தும் அறையின் யன்னல் மற்றும் கதவுகளுக்காக பித்தளை பிணைப்புக்கள் மற்றும் துணைப்பாகங்கள் பொருத்துமாறு உரிய சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | இறுதி பட்டியலில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள பிரகாரம் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |